நாள். 01.12.2022

M.C. No. 08/2022

ம.சா. 1

திருமதி. விஜயலட்சுமி

க/பெ. மாரியப்பன்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1.எனது திருமாணமானது எப்போது விவகாரத்து மூலம் ரத்து செய்யப்பட்டது என்றால் 2017 அல்லது 2019 ம் வருடம் விவகாரத்து வழங்கப்ட்டது. அது குறித்து நான் மேல் முறையீடு செய்துள்ளேன். தற்போது அந்த திருமாணமனது அமலில் இல்லை என்று சொன்னால் நான் மேல் முறையீடு செய்து அது தற்போது நிலுவையில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மேல் முறையீட்டில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் தடை உத்தரவு ஏதேனும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை.

2. நான் எனது தரப்பில் **ம.சா.ஆ. 5** ஆக தாக்கல் செய்யப்பட்ட ஆவணமானது HMop வழக்கு எண் 60/2015 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை என்றால் சரிதான். எனக்கு ஏற்கனவே நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து வழங்கப்பட்ட காரணத்தினால் தற்போதும் எனது திருமணாமனது அமலில் உள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Web Copy

3. எனது தாயின் பெயர் நாகம்மாள் ஆகும். எனது தாயார் எனது பெயரில் 01.10.2015 தேதியில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து தானா செட்டில்மண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் பத்திரம் என்று சொன்னால் சரிதான். 01.10.2015 தேதியிட்ட எனது பெயரிலான தானா செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **ஏ.ம.சா.ஆ.1** ஆகும். நான் அச்சொத்தை விற்றுவிட்டேன்.

4. நான் மேற்படி சொத்தை விற்றதாக கூறுவது குறித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி சொத்தின் மதிப்பானது 1 கோடி ரூபாய் வரை மதிப்பு இருக்கும் என்றால் தவறு. ( இப்பொருண்மை குறித்து பதிலுரையில் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாக இல்லாத காரணத்தினால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். ஆகவே மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் இவ்வினாவானது பதிவு செய்யப்பட்டது.)

5. 13.08.2020 ல் எனது தாயார் அவருக்கு பாத்தியப்பட்ட மற்றொரு சொத்து குறித்து எனது பெயரில் தானா செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றும் அதில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்று சொன்னால் சரிதான். 13.08.2020 தேதியிட்ட மனுதாரர் பெயரிலான தானா செட்டில் மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **ஏ.ம.சா.ஆ. 2** ஆகும். (இப்பொருண்மை குறித்து பதிலுரையில் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாக இல்லாத காரணத்தினால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். ஆகவே மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் இவ்வினாவானது பதிவு செய்யப்பட்டது.)

6. ஏ.மா.சா.ஆ. 1 மற்றும் 2 குறித்து நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள படிவத்தில் (Anuxer) குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பணம் வட்டிக்கு விடும் தொழில் செய்து வருகிறேன் என்றும், தருமபுரி விரைவு நீதிமன்றத்தில் CC No. 86/2019 என்ற வழக்கு தாக்கல் செய்து நான் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் நான் வட்டி தொழில் செய்யவில்லை. நான் பணம் வாங்கி கொடுத்த காரணத்தினால் எனது பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். CC No. 86/2019 ல் தாக்கல் செய்யப்பட்ட புகார், காசோலை, செக் ரிட்டன் மெமோ, அஞ்சல் ஒப்புகை அட்டையானது **ஏ.ம.சா.ஆ. 3** ஆகும். (இப்பொருண்மை குறித்து பதிலுரையில் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாக இல்லாத காரணத்தினால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். ஆகவே மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் இவ்வினாவானது பதிவு செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனையின் தீர்ப்பானது தீர்ப்பின் போது தீர்மானிக்கப்படும்.) CC No. 86/2019 ல் வட்டி தறுவதாக அவ்வழக்கு எதிரி ஒப்புக்கொண்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் நான் ஜாமீன் போட்ட காரணத்தினால்அவ்வாறு எடுத்துரைத்துள்ளேன். இது குறித்து நான் அந்த வழக்கில் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான்

Web Copy

7. நான் 2011 ம் வருடத்தில் எதிர் மனுதாராருடன் சேர்ந்து வாழ வேண்டி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். HMoP No. 31/2011 என்ற வழக்கில் நான் தாக்கல் செய்த மனுவின் சான்றிட்ட நகல் **ஏ.ம.சா.ஆ. 4** ஆகும். மேற்படி மனுவில் எனது கணவருக்கு வரதாட்சணையாக பணம், நகை கொடுக்கப்பட்டதாக இம்மனுவில் கூறியது போல் கூறியுள்ளேனா என்றால் நியபாகம் இல்லை.

8. நான் செந்தில் மெட்ரிக் பள்ளியில் ஆசிரியராக பணியற்றினேன் என்றால் நான் முன்பு பணியற்றினேன் தற்போது வேலைக்கு செல்வது இல்லை. என்னிடம் காட்டப்படும் 26.12.2019 தேதியிட்ட ஆவணமானது எனது சம்பளம் குறித்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். அது **ஏ.மா.சா.ஆ.** 5 ஆகும்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சியானது ஒத்தி வைக்கப்படுகிறது.**

Web Copy